மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 05 ஆம் நாள் வெள்ளிக்கிழமை
இ.ம.எண்.04/2023
அ.வ.எண்.131/2016

V.சின்னசாமி ... மனுதாரர்/உத்தேச தரப்பினர்

/எதிராக/

1. S.ராஜகோபால்
2. S.சிவானந்தம் ... எதிர்மனுதாரர்கள்/1, 2 வாதிகள்

3. P.பொன்னுசாமி
4. P.செல்லப்பன்
5. P.ராமசாமி
6. P.மாணிக்கம்
7. P.சிவபெருமாள்
8. P.ஈஸ்வரி
9. P.சிவராஜ் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 06.12.2023 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.G.ராமசந்திரன் அவர்கள் ஆஜராகியும், 1, 2ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.கோபிநாத் அவர்கள் ஆஜராகியும் 1, 2 எதிர்மனுதாரர்கள் எதிருரை தாக்கல் செய்யாததால் தோன்றாதரப்பினர்களாக்கப்பட்டும், 3, 5, 6, 8, 9 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.K.செந்தில்குமார் அவர்கள் ஆஜராகியும், 4, 7 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.N.சசிகுமார் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

<u>உத்தரவு</u>

உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 1 விதி 10(2) மற்றும் பிரிவு 151–ன் கீழ் மனுதாரர்/உத்தேசதரப்பினரை அசல் வழக்கில் 8ம் பிரதிவாதியாக சேர்க்க உத்தரவிடக் கோரி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவாகும்.

1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம் : –

1, 2 எதிர்மனுதாரர்கள்/வாதிகளால் மற்ற எதிர்மனுதாரர்களுக்கு எதிராக அ.வ.எண்.131/2016 என்ற வழக்கு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தாவா கோவிலின் பரம்பரை தர்மகர்த்தா ஆவார். தாவா கோவிலுக்கு மனுதாரரே பூஜை செய்து வருகிறார். இந்து அறநிலையத்துறையால் பிரதிவாதிகள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். தாவாவில் மனுதாரரது மூதாதையர் வெள்ளையன் பெயரில் வாதிகளும், பிரதிவாதிகளும் தங்களது மூதாதையர் பெயராக குறிப்பிட்டு குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளனர். உண்மையில், தாவா கோவிலின் மீது மனுதாரருக்கு அக்கறையும், உரிமையும் உள்ளது. இவ்வழக்கை பொறுத்து மனுதாரர் அவசிய தரப்பினர் ஆவார். எனவே மனுதாரர்/உத்தேசதரப்பினரை அசல் வழக்கில் 8ம் பிரதிவாதியாக சேர்க்க உத்தரவிடக் கோரி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

2) 3ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, 5, 6, 8, 9ம் எதிர்மனுதாரர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:

(இந்த எதிருரையை 4, 7 எதிர்மனுதாரர்கள் குறிப்பாணையின் பேரில் தங்களது எதிருரையாக ஏற்றுக்கொள்கிறார்கள்)

(i) மனு பொய்யானது. மோசடியானது. மனுதாரர் தாவா கோவிலுக்கான பரம்பரை வழி தர்மகர்த்தாக்களில் ஒருவர் என்பதாகவும், தான் தாவா கோவிலுக்கு பூஜைகள் செய்து வருவதாகவும், 1, 2 எதிர்மனுதாரர்கள் இவ்வழக்கின் இதர பிரதிவாதிகளும் உட்கூட்டு சேர்ந்து கொண்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், வேறு பல நடவடிக்கைகளை மனுதாரருக்கு தெரியாமல் கூட்டு சேர்ந்து கொண்டு செய்து வருவதாகவும், தற்போது தான் மேற்படி வழக்கு குறித்த விவரங்கள் தெரிய வந்ததாகவும், மனுதாரரை இவ்வழக்கில் சேர்க்க வேண்டியது அவசியம் என்றும் கூறுவது பொய்யான சங்கதிகளாகும். இவ்வழக்கில் வாதிகளுக்கு எவ்விதமான பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்பதால் வாதிகள் வழக்கு நடவடிக்கைகளை நீட்டிப்பு செய்து மேற்படி வழக்கு முடிவடைவதை காலதாமதம் செய்யும் பொருட்டு மனுதாரரை வைத்து இம்மனுவை தாக்கல் செய்ய வைத்துள்ளனர்.

(ii) மனுதாரர், 1, 2 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக சங்ககிரி சார்பு நீதிமன்றத்தின் அ.வ.எண்.216/1989 மற்றும் மேட்டூர் சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.74/2000 ஆகிய வழக்குகளில் ஏற்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் இம்மனுதாரருக்கோ, இவ்வழக்கின் வாதிகளுக்கோ தாவா கோவிலில் யாதொரு உரிமையும் கிடையாது. சேலம் மாவட்ட நீதிமன்றத்தால் மே.மு.வ.எண்.89/2002 தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேற்படி தீர்ப்பினை அடுத்து 2ம் மே.மு.வ.எண்.360/2008 வழக்கும் சென்னை உயர்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்குகளில் மனுதாரர் ஒரு தரப்பினர் ஆவார். மேற்படி தீர்ப்புகளின்படி தாவா கோவிலில் மனுதாரருக்கோ, வாதிகளுக்கோ பரம்பரை தர்மகர்த்தா மற்றும் பூஜை உரிமைகளில் எவ்வித பாத்தியமும் இல்லை என்பது தெளிவாகிறது.

(iii) நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரும் வழக்கில் புதிதாக மனுதாரரை தரப்பினராக சேர்க்க சட்டத்தில் இடமில்லை. மேற்படி மனுதாரரை வழக்கில் 7வது பிரதிவாதியாக சேர்க்க கோரப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி வழக்கில் ஏற்கனவே 7ம் பிரதிவாதியாக பொன்னுசாமி மகன் சிவராஜ் உள்ளார். தவறான முறையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு தள்ளுபடி செய்யத்தக்கதாகும். இம்மனுவை அனுமதிக்க எவ்வித நியாயமான காரணமோ, முகாந்திரமோ எதுவும் கிடையாது. எனவே மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென 3 முதல் 9 வரையிலான எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

4) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் ஏதும் முன்னிலைப்படுத்தவில்லை.

<u>4) பிரச்சினை :–</u>

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

<u>5) பிரச்சினைக்கான தீர்வு</u>

(i) மனுதாரர் தரப்பில் மனுதாரர் தாவா கோவிலின் பரம்பரை தர்மகர்த்தா என்றும், தாவா கோவிலுக்கு மனுதாரரே பூஜை செய்து வருகிறார் என்றும், இந்து

அறநிலையத்துறையால் பிரதிவாதிகள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்றும், தாவாவில் மனுதாரரது மூதாதையர் வெள்ளையன் பெயரில் வாதிகளும், பிரதிவாதிகளும் தங்களது மூதாதையர் பெயராக குறிப்பிட்டு குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளனர் என்றும், உண்மையில், தாவா கோவிலின் மீது மனுதாரருக்கு அக்கறையும், உரிமையும் உள்ளது என்றும், இவ்வழக்கை பொறுத்து மனுதாரர் அவசிய தரப்பினர் என்றும், எனவே மனுதாரர்/உத்தேசதரப்பினரை அசல் வழக்கில் 8ம் பிரதிவாதியாக சேர்க்க உத்தரவிடக் கோரி இம்மனு தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது.

(ii) 3 முதல் 9 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர், 1, 2 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக சங்ககிரி சார்பு நீதிமன்றத்தின் அ.வ.எண்.216/1989 மற்றும் மேட்டுர் சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.74/2000 ஆகிய வழக்குகளில் ஏற்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் இம்மனுதாரருக்கோ, இவ்வழக்கின் வாதிகளுக்கோ தாவா கோவிலில் யாதொரு உரிமையும் கிடையாது என்றும், சேலம் மாவட்ட நீதிமன்றத்தால் மே.மு.வ.எண்.89/2002 தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி தீர்ப்பினை அடுத்து 2ம் மே.மு.வ.எண்.360/2008 வழக்கும் சென்னை உயர்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி வழக்குகளில் மனுதாரர் ஒரு தரப்பினர் என்றும், மேற்படி தீர்ப்புகளின்படி தாவா கோவிலில் மனுதாரருக்கோ, வாதிகளுக்கோ பரம்பரை தர்மகர்த்தா மற்றும் பூஜை உரிமைகளில் எவ்வித பாத்தியமும் இல்லை என்பது தெளிவாகிறது என்றும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரும் வழக்கில் புதிதாக மனுதாரரை தரப்பினராக சேர்க்க சட்டத்தில் இடமில்லை என்றும், இவ்வழக்கை காலதாமதப்படுத்தும் நோக்கோடு இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் கூறியுள்ளது தெரிய வருகிறது.

(iii) இவ்வழக்கில் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொள்கையில், 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. மனுதாரர் தரப்பில் தாவா கோவிலை பொறுத்து மனுதாரர் தர்மகர்த்தாவாக செயல்பட்டுவருவதாகவும், தாவா சொத்தை பொறுத்து மனுதாரருக்கு அக்கறையும், உரிமையும் உள்ளதாகவும், மேற்படி வழக்கில் வாதிகளும்,

பிரதிவாதிகளும் கூட்டு சேர்ந்து கொண்டு மனுதாரருக்கு தெரியாமல் மனுதாரரின் உரிமைக்கு எதிராக மேற்படி வழக்கை தாக்கல் செய்து நடத்தி வருவதாகவும், எனவே அசல் வழக்கில் தன்னை 8 ம் பிரதிவாதியாக சேர்க்க கோரியுள்ளது தெரியவருகிறது.

(iv) அதே சமயத்தில் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சங்ககிரி மற்றும் மேட்டுர் சார்பு நீதிமன்றங்களில் நடந்த அசல் வழக்குகளிலும், அதன்பேரிலான முதலாம் மற்றும் இரண்டாம் மேல்முறையீட்டு வழக்குகளிலும், மனுதாரருக்கு தாவா சொத்தின்பேரில் எவ்வித உரிமையும் இல்லை என தீர்ப்பளிக்கப்பட்டுள்ளதாகவும், அதனால் மனுதாரருக்கு இவ்வழக்கில் தரப்பினராக சேர்வதற்கு எவ்வித அக்கறையும் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும், மேற்படி வழக்கு நடவடிக்கைகள் குறித்த எவ்வித ஆவணங்களையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்பதும் தெரிய வருகிறது. மேலும் இவ்வழக்கு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரும் வழக்கு என்றாலும் கூட, வழக்குமூலமானது வழக்கு சொத்தை பொறுத்தே எழுகிறது என்பதையும், நபரை பொறுத்து எழுவதில்லை என்பதையும் இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

(v) இவ்வழக்கில் தாவா சொத்திற்கு தொடர்புடைய அனைத்து நபர்களையும் உள்ளடக்கி விசாரணை செய்தால் தான் வழக்கு விசாரணை முழுமையானதாகவும், வழக்கின் தரப்பினர்களை கட்டுப்படுத்தும் இறுதியான தீர்ப்பும் பகர முடியும் என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இவ்வழக்கில் பிறப்பிக்கப்படும் தீர்ப்பு அனைத்து நபர்களையும் உள்ளடக்கிய முழுமையான தீர்ப்பாக இருக்க வேண்டும் என்பதால் உத்தேச தரப்பினரை தாவாவில் 8 ம் பிரதிவாதியாக சேர்ப்பது நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. வழக்கின் தகுதிப்பாடுகளை வழக்கு விசாரணையில் தான் முடிவு செய்ய இயலும் என்பதால், இம்மனு அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

முடிவாக, மனு செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 05 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2024.01.05 18:03:06 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை</u>

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை</u>

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2024.01.05 18:03:12 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.